## February 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து பாதுகாப்பு பெட்டகம், மகப்பேறு இறப்பு விகிதத்தை குறைக்கும் 'தாய்மை செயலி' திட்டம் ஆகியவற்றை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தொடங்கி வைத்தார். அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய் தியாளர்களிடம் கூறியதாவது:

(i) தமிழகத்தில் ஆண்டு தோறும் 8 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றனர். அவற்றில் 4.5 லட்சம் பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

(ii) அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் 20 சதவீதக் குழந்தைகள் இரண்டுகிலோவுக்கும் கீழ் குறைவான எடையில் பிறக்கின்றனர். அவ்வாறாக 52,000 குழந்தைகள் எடை குறைவான நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(iii) அந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதற்கும், தொடர் கவனிப்புக்கும், இரும்புச்சத்து மருந்தும், வைட்டமின் பி 3 மற்றும் மல்டி வைட்டமின் சொட்டு மருந்துகள் அடங்கிய 'பச்சிளம் குழந்தை பாதுகாப்பு பெட்டகம்' வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, ரூ.8.07 கோடியில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள் ளது.

(iv) தாய்மை செயலி என்ற புதிய செயலி தொடங்கப்பட்டுள்ளது. இந்த செயலி தமிழகத்தில் தாய் - சேய் நல சேவைகளை வலுப்படுத்தும் முக்கிய முன்னெடுப்பாகும். கர்ப்பிணிகள் பதிவு, பேறுகால பரிசோதனைகள், பிரசவம், பிரசவத்துக்கு பிந்தைய பராமரிப்பு, குழந்தை வளர்ச்சி, தடுப்பூசி தவணைகள் போன்றவை இந்த செயலியின் மூலம் கண்காணிக்கப்படும்.

(v) மகப்பேறு இறப்பு விகிதம், குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்துவருகிறது. இருப்பினும், அவற்றை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டுவர அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டே பச்சிளம் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் மற்றும் தாய்மை செயலி திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்றார்.

2. நிகழாண்டுக்கான முதல் சூரிய கிரகணம் பிப். 17-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) நிகழவுள்ளது.

(i) அன்றைய தினம் பிற்பகல் 3.26 மணி அளவில் சூரிய கிரகணம் தொடங்குகிறது. தொடர்ந்து இரவு 7.57 மணிக்கு முடிவடைகிறது. இந்த நெருப்பு வளைய சூரிய கிரகணம் இந்தியாவில் தெரியாது.

(ii) அண்டார்டிகாவின் தொலைதூரப் பகுதிகள் மற்றும் தென்னாப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலிருந்து மட்டுமே காணமுடியும். அண்டார்டிகா கண்டத்தில் கான்கார்டியா மற்றும் மிர்னி போன்ற இடங்களிலும், தென்னாப்பிரிக்கா, தான்சானியா, சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே போன்ற நாடுகளில் பகுதியளவும், தென் அமெரிக்காவின் ஆர்ஜென்டீனா மற்றும் சிலியின் சில பகுதிகளில் மட்டுமே இந்த சூரிய கிரகணத்தை தெளிவாக காண முடியும். எனினும் நாசா தளம், https://www.timeanddate.com யூ-டியூப் சேனல் மற்றும் இணையதளங்களில் இந்த நிகழ்வை காணலாம்.

(iii) இந்த ஆண்டின் மற்றொரு சூரிய கிரகணம் ஆக. 12-ஆம் முழு சூரிய கிரகணம் ஆகும். இது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் சில பகுதிகளில் தெரியும் என அறிவியல் பலகை அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் பா.ஸ்ரீ குமார் தெரிவித்தார்.

3. தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து, பிரதமர் அநுதின் சர்ன்விராகுல் தலைமையிலான பூம்ஜெய்தாய் கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் ஆதரவு பெற்ற பியூ தாய் கட்சி இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கப் போவதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

(i) தேர்தல் முடிவில் பூம்ஜெய்தாய் கட்சி 193 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது.

இருப்பினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை (251 இடங்கள்) அக்கட்சியால் தனித்துப் பெற முடியவில்லை. இந்நிலையில், தேர்தலில் 74 இடங்களைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்த பியூதாய் கட்சியுடன் கூட்டணி அமைக்க அநுதின் முடிவு செய்துள்ளார்.

(ii) கடந்த ஆண்டு ஜூன் மாதம், கம்போடியா எல்லைப் பிரச்னை காரணமாக பியூ தாய் கூட்டணியில் இருந்து அநுதின் வெளியேறினார். இப்போது மீண்டும் அதே கட்சியுடன் அவர் கைகோத்திருப்பது அந்நாட்டு அரசியலில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது. தாய்லாந்தின் தற்போதைய பொருளாதாரச் சவால்களைச் சமாளிக்கவும், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தவும் இந்த வலுவான கூட்டணி மிகவும் அவசியம் என்று இருகட்சிகளின் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

4.காஸா மறுசீரமைப்புப் பணிகளுக்காகப் பல நூறு கோடி டாலர் மதிப்பிலான நிதியுதவித் திட்டம் மற்றும் அங்கு அமைதியை நிலைநாட்ட ஐ.நா. அங்கீகாரம் பெற்ற சர்வதேச பாதுகாப்புப் படையை அமைப்பது குறித்த முக்கிய அறிவிப்புகளை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அடுத்த வாரம் வெளியிடவுள்ளார்.

(i) அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வரும் வியாழக்கிழமை (பிப்.19) நடைபெறவுள்ள அமைதிக் குழுவின் முதலாவது அதிகாரபூர்வக் கூட்டத்தில் இந்த அறிவிப்புகள் வெளியாகும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ii) அதிபர் டிரம்ப் தலைமையில் நடைபெறவுள்ள அமைதிக் குழுவின் முதல் கூட்டத்தில், 20-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

(iii) காஸா மறுசீரமைப்புக்கு, அமைதிக் குழுவின் உறுப்பு நாடுகள் வழங்கும் நிதியுதவி விவரங்களை இக்கூட்டத்தில் டிரம்ப் அறிவிப்பார். அமெரிக்கா எந்தக் கோரிக்கையும் விடுக்காத நிலையிலும், பல நாடுகள் தாமாக முன்வந்து நிதி வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iv) பாதுகாப்புப் படை:

கடந்த செப்டம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட டிரம்ப் பின் காஸா திட்டத்தின் ஒரு பகுதியாக, ஐ.நா. அங்கீகாரம் பெற்ற பாதுகாப்புப் படை அங்கு நிறுத்தப்படும். இதற்காக பல் வேறு நாடுகள் வீரர்களை அனுப்பத் தயாராக உள்ளன. குறிப்பாக, இந்தோனேசியா 8,000 வீரர்களை அனுப்ப ஒப்புக்கொண்டுள்ளது.

(v) நிர்வாகக் குழு:

ஹமாஸ் அமைப்பிடமிருந்து காஸா நிர்வாகத்தைப் பொறுப்பேற்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகக் குழுவின் செயல்பாடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்படும்.

(vi) பின்னணி :

- ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் கடந்தமாதம் நடந்த உலகப் பொருளாதார மாநாட்டுக்கிடையே, அதிபர் டிரம்ப் இந்த அமைதிக் குழுவை பிரகடனப்படுத்தினார்.
- இக்குழுவில் பாகிஸ்தான், துருக்கி, எகிப்து, சவூதி அரேபியா, கத்தார், இந்தோனேசியா போன்ற நாடுகள் இணைந்துள்ளன. அமெரிக்காவின் மேற்கத்திய நட்பு நாடுகள் இதில் இணையத் தயக்கம் காட்டி வரும் நிலையில், இஸ்ரேலும் இக்குழுவில் இணைந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதிப்படுத்தினார்.
- இக்குழுவில் இணைய இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியா இதுவரை தனது இறுதி முடிவை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

5.வங்கதேச நாடாளுமன்றத் தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) அமோக வெற்றி பெற்றது. அக்கட்சித் தலைவர் தாரிக் ரஹ்மான் அடுத்த பிரதமராகப் பதவியேற்க உள்ளார்.

(i) கடந்த 2024-ஆம் ஆண்டு வங்கதேசத்தில் மாணவர்கள் தலைமையிலான போராட்டம் காரணமாக அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அந்தப் போராட்டத்தால் வங்கதேசத்தில் இருந்து வெளியேறிய ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதைத் தொடர்ந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது.

(ii) இந்நிலையில், வங்கதேசத்தில் 13-ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மாணவர்கள் போராட்டத்துக்குப் பின்னர் முதல்முறையாக நடத்தப்பட்ட இந்தத் தேர்தல் சிறுவன் முறை சம்பவங்களைத் தவிர, மற்றபடி அமைதியான முறையில் நடைபெற்றது.

(iii) 59.44% வாக்குப் பதிவு: மொத்தம் 300 தொகுதிகள் உள்ள நிலையில், ஜமாத்-ஏ-இஸ்லாமி கட்சியின் வேட்பாளர் ஒருவர் மரணம டைந்ததால் ஒரு தொகுதியில் தேர்தல் ரத்து செய்யப்பட்டது. 299 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 59.44 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்குப் பதிவு நிறைவடைந்தவுடன் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

(iv) பெரும்பான்மைக்குத் தேவையான 151 தொகுதிகளைத் தாண்டி, 209 தொகுதிகளில் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகனான தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. பாகிஸ்தானுக்கு நெருக்கமான கட்சி என்று அறியப்படும் அடிப்படைவாத கட்சியான ஜமாத்-ஏ-இஸ்லாமி 68 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பிற தொகுதிகளில் சுயேச்சைகள் மற்றும் இதர கட்சிகள் வெற்றி பெற்றன.

(v) 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆட்சி:

- டாக்கா-17, போக்ரா-6 ஆகிய இரு தொகுதிகளில் தாரிக் போட்டியிட்ட நிலையில், அவ்விரு தொகுதிகளிலும் அவர் வெற்றி பெற்றார். இதன்மூலம் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர், வங்கதேசத்தில் பிஎன்பி ஆட்சியமைக்க உள்ளதாக அந்நாட்டு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டது. பிரதமராக தாரிக் ரஹ்மான் பதவியேற்கவுள்ளார்.
- கலீதா ஜியா, ஷேக் ஹசீனா என இரு பெண் பிரதமர்கள் தொடர்ந்து ஆட்சி செய்துவந்த நிலையில், 35 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக ஆண் ஒருவர் பிரதமராகவுள்ளார்.

(vi) தந்தையைத் தொடர்ந்து மகன் :-

- தாரிக் ரஹ்மானின் தந்தையும் ராணுவ ஆட்சியாளருமான ஜியாவுர் ரஹ்மான் பிஎன்பியை தொடங்கினார். வங்கதேச அதிபராக இருந்த அவர், 1981-ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர், சுமார் 40 ஆண்டு காலம் பிஎன்பிக்கு தாரிக்கின் தாய் கலீதா ஜியா தலைமை வகித்தார். 2001- ஆம் ஆண்டு பிஎன்பியில் செயல் படத் தொடங்கிய தாரிக், 2009- ஆம் ஆண்டு அக்கட்சியின் மூத்த துணைத் தலைவரானார்.
- 2007-ஆம் ஆண்டு பிஎன்பியால் நியமிக்கப்பட்ட அதிபர் இயாஜுதீன் அகமது தலைமையில் ராணுவ ஆதரவு பெற்ற காபந்து அரசின் ஆட்சிக் காலத்தில், ஊழல் குற்றச் சாட்டுகளின் கீழ் தாரிக் கைது செய்யப்பட்டார். 18 மாதங்கள் சிறையில் இருந்த அவர், அங்கிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் லண்டனில் தஞ்சமடைந்தார். சுமார் 17 ஆண்டுகளுக்குப் பின்னர், கடந்த ஆண்டு அவர் வங்கதேசம் திரும்பினார். கலீதா வின் மரணத்தைத் தொடர்ந்து, அதிகாரபூர்வமாக தாரிக் பிஎன்பி தலைவரானார்.

(vii) ஜூலை சாசனத்துக்கு 4.80 கோடி பேர் ஆதரவு:

- வங்கதேசத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் பிரதமராக இருக்க முடியாது, அந்நாட்டில் அவசரநிலையை பிரதமர் தன்னிச்சையாக அறிவிக்க முடியாது, அவசரநிலையை அமல்படுத்த அமைச்சரவை மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒப்புதல் வேண்டும் உள்ளிட்ட அம்சங்களுடன் அந்நாட்டு நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்யும் நோக்கில், ஜூலை சாசனம் கொண்டுவரப்பட்டது. தேர்தலின்போது அந்த சாசனம் மீதும் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், அதற்கு 4.80 கோடி பேர் ஆதரவாகவும், 2.25 கோடி பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

6. வெனிசுலாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை நேரடியாக கொள்முதல் செய்ய, ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு அமெரிக்கா உரிமம் வழங்கியுள்ளது.

(i) வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோ பிடிபட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீதான எரிசக்தித் துறை தடைகளை அமெரிக்கா தளர்த்தி வருகிறது. முன்னதாக, இடைத்தரகர்கள் மூலமாக மட்டுமே எண்ணெய் வாங்க அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது உரிமம் பெற்றுள்ள நிறுவனங்கள் நேரடியாகவே கொள்முதல் செய்ய முடியும். வெனிசுலாவின் கச்சா எண்ணெய்யைச் சுத்திகரிப்பதற்கேற்ப ரிலையன்ஸின் ஜாம்நகர் ஆலை வடிவமைக் கப்பட்டுள்ளதால், இந்த நேரடி கொள்முதல் அனுமதி நிறுவனத்தின் லாபத்தைக் கணிசமாக உயர்த்தும் எனக் கருதப்படுகிறது.

7. அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 50 விமான நிலையங்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் ரியல் எஸ்டேட் துறைக்கு மிகப் பெரிய வாய்ப்பைகளை உருவாக்கித் தரும்' என்று விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

(i) தில்லியில் நடைபெற்ற தேசிய நகர்ப்புற மற்றும் ரியல் எஸ்டேட் மேம்பாட்டு மாநாடில் பங்கேற்ற மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு பேசியதாவது:

(ii) ரியல் எஸ்டேட் துறை வளர்ச்சியில் விமான நிலையங்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. விமானப் போக்குவரத்து சந்தையில் உலகின் வேகமாக வளர்ந்துவரும் நாடான இந்தியாவில் தற்போது 165 விமான நிலையங்கள் பயன் பாட்டில் உள்ளன. நாட்டில் சரா சரியாக 33 நாள்களுக்கு ஒரு புதிய விமான நிலையம் அல்லது முனையம் கட்டப்பட்டு வருகிறது.

(iii) அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 50 புதிய விமான நிலையங்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் ரியல் எஸ்டேட் துறைக்கு மிகப் பெரிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

(iv) விமான நிலையங்களுக்கு அருகே உயரமான கட்டடங்களுக்கு உள்ள கட்டுப்பாடுகள் விவகாரத்தில், விமானப் போக்குவரத்து பாதுகாப்பை சமரசம் செய்யாத வகையில் உரிய தீர்வு காண்பது தொடர்பாக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

(v) மேலும், நாட்டின் ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சிக்கான திறன் குறித்து குறிப்பிட்ட மத்திய அமைச்சர், 'இத் துறையின் மதிப்பு வரும் 2030-இல் ஒரு டிரில்லியன் டாலர் (ரூ.91 லட்சம் கோடி) மதிப்புக்கும், 2047-ஆம் ஆண்டுக்குள் 5 முதல் 7 டிரில்லியன் டாலர் மதிப்பு (ரூ. 453 லட்சம் கோடி முதல் ரூ. 634 லட்சம் கோடி) அளவுக்கும் உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில், ரியல் எஸ்டேட் மேம்பாட்டில் மக்களின் தரமான வாழ்வுக்கு கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

(vi) வாடகை வீடுகள், குறிப்பாக இளைஞர்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடும் திட்டங்களை ரியல் எஸ்டேட் துறை மேம்படுத்துவது அவசியமாகும்' என்றும் குறிப்பிட்டார்.

8. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சிஆர்பி) வெளியிட்டுள்ள 2023-ஆம் ஆண்டு வரையிலான தரவுகளின்படி, இந்திய அளவில் 2023-இல் பதிவான வரதட்சிணை கொடுமை வழக்குகளின் அகில இந்திய எண்ணிக்கை தமிழ்நாட்டில் 144 உள்பட மொத்தம் 15,444 ஆகும். இதில் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தமிழகத்தில் 8 உள்பட மொத்தம் 1,668 ஆகும். வரதட்சிணை மரணங்கள் தொடர்பாக தமிழகத்தில் 11 உள்பட 6,027 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதில், 3,202 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. சுருக்குமடி வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் முறையைத் தொடரலாம் என்ற நிபுணர் குழுவின் அறிக்கையை இணைத்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

(i) மத்திய அரசின் மீன்வளத் துறையானது அந்த அறிக்கையை பிரமாணப்பத்திரத்துடன் இணைத்து

வியாழக்கிழமை (பிப்.12) தாக்கல் செய்தது.

(ii) அதில் மத்திய அரசு கூறியிருப்பதாவது: சுருக்குமடி வலையை பயன்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக நிபுணர் குழுவை மத்திய அரசின் மீன்வளத் துறை, கடந்த 2022, ஆக.2-ஆம் தேதி அமைத்தது.

(iii) பல்வேறு கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் மேற்கொள்ளும் சுருக்குமடி மீன்பிடி நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கும், சுருக்குமடி பயன்பாடு குறித்த தேசிய ஒருமித்த கருத்துக்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் இந்தக் குழு பணிக்கப்பட்டது.

(iv) இந்தக் குழு 2024-ஆம் ஆண்டு ஜன.9,10 ஆகிய தேதிகளில் சென்னையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆலோசனை நடத்தியது. மேலும், ஜன.11, 19 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிர மீன்வள ஆணையர்களுடன் ஆலோசனை நடைபெற்றது.

(v) இறுதியாக பிற மீன்பிடி முறையை போல சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன் பிடிக்கும் முறையையும் தொடரலாம் என்று அக்குழு முடிவு செய்து அறிக்கை தாக்கல் செய்தது.

(vi) பின்னணி:

- சுருக்குமடி வலையைப் பயன்படுத்தத் தடை விதித்து தமிழக அரசு கடந்த 2020, பிப்.17-இல் உத்தரவு பிறப்பித்தது. இதற்கு எதிராக மீனவ அமைப்புகள் சார்பில் உச்சநீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.
- இந்த வழக்கை 2022-ஆம் ஆண்டு விசாரித்த உச்சநீதிமன்றம் , மத்திய மீன்வளத் துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்டுள்ள குழு சுருக்குமடி வலையை பயன்படுத்துவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

10. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு பிப்ரவரி முதல் மே வரையில் மாதந் தோறும் 2.5 டி.எம்.சி. என்ற அளவில் 10 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடுவதை உறுதி செய்யுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை தமிழக அரசு வலியுறுத்தியது.

(i) மேலாண்மை காவிரி நீர் ஆணையத்தின் 48-ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற்றது. ஆணையத்தின் உறுப்பினர்களான தமிழகம், கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரி அரசுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இக்கூட்டம் நடைபெற்றது.

(i) எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 48- ஆவது கூட்டத்தில், தமிழக உறுப்பினர் மற்றும் நீர்வளத்துறை செயலர் ஜெ. ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவுத் தலைவர் இரா.சுப்பிரமணியன் ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.

(ii) அப்போது, வெள்ளிக்கிழமை (பிப்.13) நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர் இருப்பு 53.444 டி.எம்.சி. உள்ளது எனவும், அணையிலிருந்து விநாடிக்கு 2,503 கன அடி நீர் குடிநீர், தொழிற் சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் சுற்றுச்சூழல் நீர் ஓட்டத்திற்காகவும் திறந்துவிடப்படுகிறது என்றும் தமிழக உறுப்பினர் தெரிவித்தார்.

(iii) கர்நாடக அணைகளின் நீர் இருப்பினை கருத்தில் கொண்டு, தமிழகத்துக்கு நிகழாண்டு பிப்ரவரி முதல் மே மாதம் வரை வழங்கப்பட வேண்டிய சுற்றுச்சூழல் நீர் அளவான 10 டி.எம்.சி. நீரை மாதத்திற்கு 2.5 டி.எம்.சி வீதம் உச்சநீதிமன்ற ஆணையின்படி கர்நாடகம் பிலிகுண்டுலுவில் உறுதி செய்யுமாறு தமிழக உறுப்பினர் ஆணையத்தை வலியுறுத்தினார் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. தில்லியில் பிரதமரின் புதிய அலுவலகமான 'சேவா தீர்த்' வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

(i) இதன்மூலம் ரெய்சினா ஹில்ஸ் பகுதியில் குடியரசுத் தலைவர் மாளிகை அருகே உள்ள ஆங்கிலேயர் ஆட்சிக்கால தெற்கு பிளாக் கட்டடத்தில் இருந்து 'சேவா தீர்த்' வளாகத்துக்கு பிரதமர் அலுவலகம் மாறியது. புதிய அலுவலகத்தில் முதல் நாளில் பல்வேறு முக்கியத் திட்டங்கள் தொடர்பான கோப்புகளில் அவர் கையொப்பமிட்டார்.

(ii) கடந்த 1931, பிப்.13-இல் இந்தியாவின் நவீன தலைநகராக புது தில்லி அதிகாரபூர்வமாக நிறுவப்பட்டது. இதன் 95-ஆவது ஆண்டு தினத்தில் தற்போதைய முக்கிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. தில்லி சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பிரதமர் அலுவலக வளாகத்தில் பிரதமர் அலுவலகம், தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செயலகம், மத்திய அமைச்சரவை செயலகம் ஆகியவை அமைந்துள்ளன. முன்பு இந்த அலுவலகங்கள் தனித்தனி கட்டடங்களில் செயல்பட்டு வந்தன.

(iii) புதிய அலுவலகம் திறப்பு:

- தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத்தோவல், பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங், பிரதமரின் முதன்மைச் செயலர்கள் பி.கே. மிஸ்ரா, சக்திகாந்த தாஸ் உள்ளிட்ட உயரதிகாரிகளின் முன்னிலையில் பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள் உள்ளிட்டோரின் நல்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பான கோப்புகளில் கையொப்பமிட்டார்.

(iv) என்னென்ன திட்டங்கள்?

- இது தொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், 'சாலை விபத்துகளில் சிக்குவோரின் உயிரைக் காக்கும் நோக்கிலான 'பிஎம்-ரஹத்' திட்டத்தை தொடங்க பிரதமர் ஒப்புதல் அளித்தார். சாலை விபத்தில் சிக்குவோவருக்கு மேற்கண்ட திட்டத்தின்கீழ் ரூ.1.5 லட்சம் வரை ரொக்கமற்ற சிகிச்சை உறுதி செய்யப்படும். இந்த உடனடி மருத்துவ உதவி, உயிரிழப்புகளைத் தவிர்க்க உதவும்.
- மத்திய அரசின் லட்சிய திட்டங்களில் ஒன்றான 'லட்சாதிபதி சகோதரிகள்' திட்ட இலக்கை இரட்டிப்பாக்க அதாவது கோடியாக உயர்த்தும் கோப்பிலும் அவர் கையொப்பமிட்டார்.
- விவசாயிகளுக்குப் பெரும் ஆதரவளிக்கும் நோக்கில், வேளாண் உள்கட்டமைப்பு நிதியை இரு மடங்கு அதாவது ரூ.2 லட்சம் கோடியாக அதிகரிக்க பிரதமர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- ரூ.10,000 கோடி மூலதனத்துடன் 'புத்தாக்க இந்தியா' இரண்டாம் கட்ட நிதி ஆதரவு திட்டத்துக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது' என்றனர்.

(iv) 'குடிமக்களே தெய்வம்': முன்னதாக, 'சேவா தீர்த்' வளாக வாயிலில் பெயர்ப் பலகையை பிரதமர் மோடி திறந்துவைத்தார். அந்தப் பெயர்ப் பலகையில் தேவநாகரி எழுத்துகளில் 'நாகரிக் தேவோபவ' (குடிமக்களே தெய்வம்) என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

(v) கடந்த 2014-இல் பிரதமராக தான் பதவியேற்றதில் இருந்தே காலனித்துவ அடையாளங்களில் இருந்து விலகி, அந்த மனநிலை ரீதியிலான மாற்றத்துக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார் பிரதமர் மோடி; பிரதமர் அலுவலகம் இனி சேவா தீர்த் என்றே அழைக்கப்படும். நவீன, திறன்மிக்க, அனைவரும் அணுகக்கூடிய, மக்களை மையப்படுத்திய கட்டமைப்பை உருவாக்கும் பிரதமரின் அர்ப்பணிப்பை புதிய வளாகம் பிரதிபலிக்கிறது. இந்திய நிர்வாக கட்டமைப்பில் இதுவொரு முக்கிய மைல்கல் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.